Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.STC.No.400/ 2024

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.5**

| | | | |
|---|---|---|---|
| Name: | பூபதி | Calling: | ரயில்வே ஊழியர் ஓய்வு |
| Father's/Husband's Name: | அருணாச்சலம் | Religion: | |
| Village: | செட்டியப்பனூர் | Age: | 62 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 26.05.2025

(எதிரி ஆஜர்.)

அ.சா. 1 குறுக்கு விசாரனை தொடர்ச்சி

இந்த வழக்கில் நான் எதிரிக்கு எதற்காக பணம் கொடுத்தேன் என்ற விவரத்தை வழக்கறிஞர் அறிவிப்பிலோ மற்றும் காசோலை வழக்கிலோ குறிப்பிட்டு கூறியுள்ளேன் என்றால் நான் அனைத்து விவரங்களையும் எனது வழக்கறிஞரிடம் சொல்லியுள்ளேன். வழக்கறிஞர் அறிவிப்பில் மேற்கண்ட விவரங்கள் இல்லை என்றால் இருக்கலாம். வழக்கில் நான் எந்த காரணத்திற்காக எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்ற விவரத்தை நான் சொல்லவில்லை என்றால் சொல்லாமல் இருக்கலாம். நீதிமன்றத்தில் தாக்கல் செய்த முதல் விசாரனை சாட்சியத்திலும் எதிரிக்கு எதற்காக பணம் கொடுத்தேன் என்று சொல்லவில்லை என்றால் இருக்கலாம். காசோலை வழக்கில் எதிரிக்கு எதற்காக பணம் கொடுத்தேன் என்ற விவரத்தை குறிப்பிட்டு கூற வேண்டும் என்பதால் இந்த வழக்கு தவறான வழக்கு என்பதால் தான் அறிவிப்பிலோ வழக்கிலோ சாட்சியத்திலோ கூறவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் எப்போது பணம் கேட்டார் என்றால் 23.06.2023 நான் எதிரிக்கு எப்போது பணம் கொடுத்தேன் என்றால் 28.06.2023. இந்த விவரத்தை வழக்கறிஞர் அறிவிப்பிலோ வழக்கிலோ சாட்சியத்திலோ கூறிவுள்ளேனா என்றால் கொடுக்கப்பட்ட விவரத்தை

கூறியுள்ளேன். 28.06.2023 எங்கு வைத்து எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்றால் எனது வீட்டில் வைத்து கொடுத்தேன். இந்த விவரத்தை வழக்கறிஞர் அறிவிப்பிலோ வழக்கிலோ சாட்சியத்திலோ கூறவில்லை என்றால் இல்லை. நான் எதிரிக்கு யார் மூலம் எதன் அடிப்படையில் பணம் கொடுத்தேன் என்றால் என்னிடம் 5 வருடம் பழகிய நண்பர் என்பதாலும் சீட்டு பணத்தை முறையாக கட்டியதால் அவர் மேல் உள்ள நம்பிக்கையின் அடிப்படையிலும் பேருந்து உரிமையாளர் என்பதாலும் கொடுத்தேன். மேற்படி விவரத்தை வழக்கறிஞர் அறிவிப்பிலோ வழக்கிலோ சாட்சியத்திலோ கூறவில்லை என்றால் இல்லை. STC NO 401/2024 என்ற வழக்கில் எதிரி என்னிடம் எப்போது பணம் கேட்டார் என்றால் 07.09.2023 . நான் எப்போது பணம் கொடுத்தேன் என்றால் 11.09.2023 ல் என் வீட்டில் கொடுத்தேன். இந்த வழக்கில் மேற்கண்ட விவரத்தை வழக்கறிஞர் அறிவிப்பிலோ வழக்கிலோ சாட்சியத்திலோ கூறவில்லை என்றால் ஞாபகமில்லை. STC.NO.400/2024 ல் சம்மந்தப்பட்ட வழக்கின் விவரங்களை STC.NO.401/2024 என்ற வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் வெவ்வேறு வழக்குகள் என்பதால் குறிப்பிடவில்லை. இரண்டு காசோலை வழக்கிற்க்கும் ஒரே வழக்கறிஞரை நியமித்து ஒரே தேதியில் தான் வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினேனா என்றால் ஒரே வழக்கறிஞர் என்பதால் இரண்டு வழக்குகளின் விவரங்களை கூறி நோட்டீஸ் அனுப்ப சொன்னேன்.நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்க்கு ம.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள வழக்கறிஞர் பதில் அறிவிப்பில் இரண்டு காசோலைகளும் தவறான காசோலை என்பதால் தான் வழக்கறிஞர் அறிவிப்பில் ஒன்றைப்பற்றி மற்றோன்றில் குறிப்பிடாமல் அனுப்பியுள்ளது தவறு என்ற விவரத்தை தெரிந்துக்கொண்டேன் என்றால் தவறான தகவல்கள் அடங்கிய பதில் மனுக்கள் பெறப்பட்டதாக அறியப்பட்டேன்.அறியப்பட்ட பதில் அறிவிப்பு தகவலுக்கு நான் மறுத்து பதில் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் என்னுடைய வழக்கறிஞரிடம் தெரியபடுத்தி விட்டேன்.என்னுடைய வழக்கறிஞரிடம் தகவலை தெரியபடுத்திய பிறகு எதுவும் பதில் மறுப்பு அறிவிப்பு அனுவிப்பினாரா என்ற விவரம் தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொள்ளவில்லை. ம.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணத்தில் நான் சீட்டு நடத்தியதற்காக வாங்கப்பட்ட காசோலையை தவறாக பயன்படுத்தி எதிரிக்கு வழக்கிறஞர் அறிவிப்பு அனுப்பபட்டுள்ளதாக பதில் அறிவிப்பில் கூறியுள்ள விவரத்தை தெரிந்துக்கொண்டேனா என்றால் தவறான தகவல்கள் அடங்கிய மனுவை தெரிந்துக்கொண்டேன்.STC 400/2024 ,STC 401/2024 இரு வழக்கிலும் உங்களிடம் பணம் பெற்றுக்கொண்டு காசோலையில் கையொப்பம் எதுவும் எதிரி செய்துக்கொடுக்கவில்லை என்றால் முற்றிலும் தவறானது. காசோலையில் எதிரி கையொப்பம் செய்து கொடுக்கவில்லை என்பதை நிருபணம் செய்ய கையெழுத்து நிபுணருக்கு அனுப்புவதற்கு ஆட்சேபனை எதுவும் இல்லையா என்றால் இல்லை.
எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) பூபதி

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K